

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் தி.மு.க. கிரிக்கெட் அணிகளுக்கு இடையேயான 'தலைவர் 72' மாபெரும் பகல் இரவு கிரிக்கெட் போட்டி நடந்தது. இதில் தகவல் தொழில்நுட்ப அணி உடன் மகளிர் அணி மோதின. இதில் தகவல் தொழில்நுட்ப அணி வெற்றி பெற்றது. விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. மற்றும் சபரீசன் கோப்பையை வழங்கினர். உடன் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, எம்.பி. கள் கலாநிதி வீராசாமி, தமிழச்சி தங்கபாண்டியன், முன்னாள் எம்.பி. பார்த்திபன், சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் சிற்றரசு, பூச்சி முருகன், சுபேர்கான், பகுதி செயலாளர்கள் காமராஜர், எஸ்.மதன்மோகன், மாநிலத் துணைச் செயலாளர்கள் மகேந்திரன், சேகர் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் தி.மு.க. கிரிக்கெட் அணிகளுக்கு இடையேயான 'தலைவர் 72' மாபெரும் பகல் இரவு கிரிக்கெட் போட்டி நடந்தது. இதில் விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி மோதின. இதில் விளையாட்டு மேம்பாட்டு அணி வெற்றி பெற்றது. விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. மற்றும் சபரீசன் கோப்பையை வழங்கினர். உடன் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, எம்.பி.க்கள் கலாநிதி வீராசாமி, தமிழச்சி தங்கபாண்டியன், முன்னாள் எம்.பி. பார்த்திபன், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் சிற்றரசு, பூச்சி முருகன், சுபேர்கான், பகுதி செயலாளர்கள், காமராஜர், எஸ்.மதன்மோகன், மாநிலத் துணைச் செயலாளர்கள் மகேந்திரன், சேகர் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ஊராட்சிகளுக்கு அதிகாரப் பகிர்வு அளித்து திட்டங்களை செயல்படுத்துவதில்

# இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம்!

## ஒன்றிய அரசின் அறிக்கையில் தகவல்!

சென்னை, பிப். 18 -

ஒன்றிய அரசின் ஊராட்சிகளின் அதிகாரப் பகிர்வு குறியீடு அறிக்கை வெளியீட்டின் படி ஒட்டுமொத்த தரவரிசையில் தமிழ்நாடு 3வது இடத்தையும், செயல்பாடுகள் குறியீட்டில் முதலிடத்தையும் பெற்றுள்ளது

"மாநிலங்களில் ஊராட்சிகளின் அதிகாரப் பகிர்வின் நிலை சான்றுகள் அடிப்படையிலான தரவரிசை" என்ற தலைப்பில் மத்திய இணை அமைச்சர் பேராசிரியர் எஸ்.பி. சிங் பாகேல், பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தால் 2025 பிப்ரவரி 13 அன்று புது தில்லியில் வெளியிடப்பட்டது.

73-வது அரசியலமைப்பு திருத்தத்தில் கூறப்பட்டுள்ள "உள்ளாட்சி" என்ற தொலை நோக்குப் பார்வையை உணர்ந்து ஊராட்சி நிறுவனங்களை (PRI) மேம்படுத்துவதற்கான பயணத்தில் புதுதில்லியில் உள்ள இந்திய பொது நிர்வாக நிறுவனம் (IIPA) நடத்திய இந்த ஆய்வறிக்கை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இந்த மதிப்பீட்டை ஒவ்வொரு மாநிலத்திலும் அரசியலமைப்பு அதிகாரங்களை நிறைவேற்றுவதற்கு ஊராட்சி அமைப்புகள் எவ்வளவு பங்காற்றியுள்ளன என்பதற்கான ஆழமான பகுப்பாய்வை இந்த அறிக்கை வழங்குகிறது. மேலும் மாநில அரசு தமது கட்டுப்பாட்டில் உள்ள வளங்களைப் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சரியாக பகிர்ந்தளிப்பதில் எவ்வளவு செயல்திறனை உடையதாக உள்ளது என அளவீடு செய்கிறது.

பின் வரும் குறியீடுகளின் அடிப்படையில் மாநிலங்களின் செயல்பாடுகள் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

I. கட்டமைப்பு
II. செயல்பாடுகள்
III. நிதி
IV. பிரதிநிதிகள்
V. திறன் மேம்பாடு
VI. பொறுப்புடைமை

ஒட்டு மொத்த குறியீட்டின் படி மாநிலங்களின் தரவரிசைப் பட்டியலில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது. ஊராட்சிகளின் கடமைகள் மற்றும் பொறுப்புகளை செயல்படுத்தும் விதத்திலும் அதிகாரப் பகிர்வு அளித்து திட்டங்களை நடைமுறைப்படுத்தும் விதத்திலும் முதலிடத்தில் உள்ளது.

ஆய்வு அறிக்கையின்படி செயல்முறைப்படுத்தும் காரணிகளின் கணக்கீட்டின் படி தமிழ்நாடு அதிக மதிப்பெண்களையும், 'திறன் மேம்பாடு' மற்றும் 'செயல்பாடுகள்' ஆகியவற்றில் இரண்டாவது இடத்தையும், 'நிதி பரிவர்த்தணை'களை பொறுத்தவரை தமிழ்நாடு மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளது. மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாடு ஊரக திட்டங்களில் ஊராட்சிகளின் ஈடுபாடு மிக உயர்ந்த தரத்தில் உள்ளது என்பதை இந்த அறிக்கை எடுத்துக் காட்டுகிறது. ஊரக உள்ளாட்சியில் பொறுப்பு வகிக்கும் பிரதிநிதிகளின் 'திறன் மேம்பாடு' என்ற பரிமாணத்தில் தேவையை மதிப்பிடுவதிலும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளுக்கான பயிற்சியை நடத்துவதிலும் மாநிலம் சிறந்து விளங்குகிறது எனவும் 'பயிற்சி நிறுவனங்களின்' குறியீட்டில் மாநிலம் சிறப்பாக செயல்படுகிறது என்றும் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உயர்ந்துவரும் செல்வாக்கு!

## 'இந்தியா டுடே' - சி வோட்டர் கருத்துக்கணிப்பில் தெளிவுபடுத்தியுள்ள உண்மை!

நாடு முழுவதும் சொந்த மாநிலத்தில் மக்கள் மத்தியில் அதிக ஆதரவை கொண்ட முதலமைச்சர் என்ற பட்டியலில், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2ஆம் இடம் பிடித்துள்ளார்.




'இந்தியா டுடே' - C VOTER கருத்துக் கணிப்பில் கடந்தாண்டு 37% ஆக இருந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் செல்வாக்கு தற்போது 57%ஆக உயர்ந்துள்ளது.

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் போகும் இடமெங்கும் பொது மக்கள், முதலமைச்சருடன் செல்ஃபி எடுத்துக் கொள்வதில் காட்டும் ஆர்வமும், மகளிர் கை குலுக்கிட முந்தும் மகிழ்ச்சியும், இளையோர் " அப்பா" என்றழைத்திடும் ஆழ்ந்த பாசமும், செல்வாக்கு உயர்ந்து கொண்டே வருவதற்குக் கண்கூடான சாட்சியங்கள் என்பதை இந்தக் கருத்துக் கணிப்பும் தெளிவுபடுத்தியுள்ளது.**

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் – தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. – மயிலை த.வேலு எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் - கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா! கனிமொழி கருணாநிதி எம்.பி. விழாப் பேருரையாற்றுகிறார்!

## தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் தலைமையில் நடைபெறுகிறது!

சென்னை, பிப். 18 -

தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா இன்று (18.2.2025-செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணியளவில் சென்னை-ராஜா அண்ணாமலைபுரத்தில் அமைந்துள்ள முத்தமிழ்ப் பேரவை திருவாவடு துறை டி.என். ராஜரத்தினம் அரங்கில் நடைபெற உள்ளது.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கும் இவ்விழாவில், பேரவைச் செயலாளர், சிறுபான்மையினர் நல ஆணைய துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ் வரவேற்புரையாற்றி இந்நிகழ்ச்சியினை தொகுத்து வழங்குகிறார்.

பேரவைத் தலைவரும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் - தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத் தலைவர் வாகை சந்திரசேகர் தலைமையுரையாற்றுகிறார்.

பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, நந்தனம் கி. மதி, வட்டச் செயலாளர்கள் துரை பார்த்திபன், ப. பொன்னுசாமி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் கழக துணைப் பொதுச்செயலாளர் - நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று விழாப் பேருரையாற்றுகிறார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பேரவைத் துணைத் தலைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

இவ்விழாவில் பேரவைத் துணைத் தலைவர் எம்.ஆர்.ஆர்.வாசு விக்ரம், பேரவைச் செயலாளர்கள் பொள்ளாச்சி மா.உமாபதி, திருவாரூர் அர.திருவிடம், வண்ணை அரங்கநாதன், என். தில்லை செல்வம், பேரவைத் துணைச் செயலாளர்கள் வீரகணேசன், கவிஞர் நன்மாறன், திருச்சி எழில்மாறன் செல்வேந்திரன், மீனா ஜெயக்குமார், கே.வி.குப்பம் சி.கோபி, கலைமாமணி அ.ஜாகிர் உசேன் உள்ளிட்ட பேரவை நிர்வாகிகள் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகின்றனர்.

சென்னை தென்மேற்கு மாவட்ட பேரவை அமைப்பாளர் ச.சண்முகநாதன் நன்றி கூறுகிறார்.



திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் பேரளம் பேரூர் கழகத்தில் நடைபெற்ற தெருமுனைப் பிரச்சார கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர், மாநில இலக்கிய அணி துணை செயலாளர் ஆடுதுறை உத்திராபதி,மன்னை.சோம இளங்கோவன் ஆகியோர் பிரச்சார உரையாற்றினர். நன்னிலம் ஒன்றிய செயலாளர் கேப்டன்.எஸ்.எம்.செல்வராஜ், பேரூர் செயலாளர் சிவ.தியாகு, இலக்கிய அணியின் மாவட்ட அமைப்பாளர் புலவர் எண்கண் சா.மணி, துணை அமைப்பாளர்கள் ஜாகிர் உசேன், ஆசிரியர் செல்லதுரை, தங்க குணசேகரன், பாலமுத்து மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பங்கேற்றனர்.

### பெரம்பலூர் மாவட்டம்! ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர்

# டாக்டர் செ.வல்லபன் தாயார் சாரதாம்பாள் உருவப்படம்! ஆ.இராசா.எம்.பி.திறந்து வைத்தார்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் – எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர், பிப். 18 -

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன் தாயார் சாராதாம்பாள் என்பவர் கடந்த 14.01.2025 அன்று மறைவெய்தினார். வடக்கு மாதவி சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் அவரது உருவப்படம் திறப்பு விழா மற்றும் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.

மேனாள் ஒன்றிய அமைச்சர் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி. போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் கலந்து கொண்டு மறைந்த சாரதாம்பாள் அவர்களின் உருவப்படத்தை திறந்து வைத்து, மலரஞ்சலி செலுத்தினார்கள்.

இதில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த், மாவட்ட கழக முன்னாள் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ் குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், செ.அண்ணாதுரை, மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்,நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம். ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி. ராஜேந்திரன்,

ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ. வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் ஜெயசீலன், காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் சுரேஷ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ)ஹரி பாஸ்கர், துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், பெரம்பலூர் ஒன்றியக்குழு முன்னாள் தலைவர் மீனா அண்ணாதுரை, மருத்துவர் தங்கராஜ்,ஹீசைன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில் இலவச பொது மருத்துவ முகாம் பெத்த நாயக்கன் பாளையத்தில் நடைபெற்றது. முகாமை கிழக்கு மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் டாக்டர் கோகுல் வரவேற்றார். இந்த முகாமை கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட பொருளாளர் ஆர்.வி. ஸ்ரீ ராம், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், ஒன்றிய செயலாளர் தங்க மருதமுத்து, மனோகரன், முத்துலிங்கம், பேரூர் செயலாளர் வெங்கடேஷ், பேரூராட்சி தலைவர் பழனியம்மாள், ராஜராஜன், ஜெகநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.